பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16–7–2009) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

155. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

156. ‘சிட்கோ ஓர் கண்ணோட்டம்’ என்கிற சிறுநூல், 2009. (தமிழ்)

157. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2009–2010. (தமிழ்)

158. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2009–2010. (தமிழ்)

159. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2009–2010. (தமிழ்)